**தொழில்நுட்பக் கல்வித் துறை, சென்னை 600 025.**

**சுற்றறிக்கை எண் eFile–DoTE/88/2025–M1, நாள் 15.03.2025.**

- பாலிடெக்னிக் கல்லூரி பயின்று சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் உள்ள மாணாக்கர்களின் நலன் கருதி எதிர் வரும் ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025 பருவத் தேர்வுகளின் போது தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) அரசால் வழங்கப்பட்டுள்ளது.

- இதற்கான தேர்வுக் கட்டணம் கீழ்கண்டவாறு நிர்ணயக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| 1. | சிறப்பு வாய்ப்பிற்கான (Grace Chance) பதிவுக் கட்டணம் | 750 |
| 2. | ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | 40 |
| 3. | விண்ணப்பக் கட்டணம் | 30 |
| 4. | ஒரு பாடத்திற்கான தேர்வுக் கட்டணம் | 65 |

- இச்சிறப்பு வாய்ப்பானது 2017–2018ஆம் கல்வி ஆண்டு மற்றும் அதற்கு முன்றைய கல்வி ஆண்டுகளில் முழு நேர (Full time) மற்றும் தொழில்இடை (Sandwich) பட்டயப் படிப்பு சேர்ந்த மாணாக்கர்களுக்கும் 2016–2017ஆம் கல்வி ஆண்டு மற்றும் அதற்கு முன்றைய கல்வி ஆண்டுகளில் பகுதி நேர (Part time) பட்டயப் படிப்பு சேர்ந்த மாணாக்கர்களுக்கும் வழங்கப்படுகிறது.

- இச்சிறப்பு வாய்ப்பினை சம்மந்தப்பட்ட மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அபராதமின்றி கட்டணத்தை சம்மந்தப்பட்ட கல்லூரிகளில் 10.04.2025க்குள் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தலைவர்,
தேர்வு வாரியம்.